# தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் 2018

----------------------------------------------------------------------------------------

## 1.1 அபிப்பிராயம்

தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான, செலவினக் கூற்றுக்கள், உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதாக நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் நியாயமான வகையில் குறிப்பிடக்கூடிய வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் விடயப் பரப்பு நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல் .

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1999 யூன் 17 ஆந் திகதிய நிதி, திட்டமிடல் அமைச்சின் தேசிய திரைப்படக் கொள்கை மற்றும் அது தொடர்பான வழிகாட்டலின் 6.5 ஆம் பிரிவு | முதலீட்டுச் சபைப் பிரமாணங்களின் கீழ் நிர்மாணிக்கப்படும் சினிமாக் கட்டிடத் தொகுதிகளில் காண்பிக்கப்படும் ஒவ்வொரு இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படத்தினதும் நுழைவுச் சீட்டின் ரூபா 2.25 அல்லது மொத்த நுழைவுச் சீட்டினது | நிதி, திட்டமிடல் அமைச்சின் தேசிய திரைப்படக் கொள்கை மற்றும் அது தொடர்பான வழிகாட்டலின குறிப்பிடப்பட்டுள்ளது. | திரைப்படக் கொள்கைகள் மற்றும் அது தொடர்பாக வழிகாட்டலின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருமானத்தில் 2.25 சதவீதம் ஆகியவற்றில் எது கூடியதோ அது தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்திற்குக் கிடைக்க வேண்டுமாயினும், 2001 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட மருதானையில் அமைந்துள்ள சினேசிட்டி (CINE CITY) சினிமாக் கட்டிடத்தொகுதியிலிருந்து அவ்வாறு பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை | | |
| (ஆ) | 1996 ஒக்தோபர் 24 ஆந் திகதிய 946/9 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன (நானாவித கட்டணம்) கட்டளை இலக்கம் | | | |
| (i) | பிரிவு 4 | சகல சினிமாக் திரையரங்குகளும் இறக்குமதி செய்யப்படும் படத்தை காண்பிக்கும் போது அறவிடும் கட்டணத்திற்குப் புறம்பாக (LEVY) ‘‘யூ’’ தரத்திலான திரைப்படம் ஒன்றிற்கான நுழைவுச் சீட்டில் ஒரு ரூபாவும் ‘‘எக்ஸ்’’ தரத்திலான மற்றும் ‘‘வயது வந்தவர்களுக்கு மிகவும் பொருத்தமானது’’ எனும் தரத்திலான திரைப் படங்களின் பொருட்டு வழங்கப்படும் நுழைவுச் சீட்டில் மூன்று ரூபாவும் அறவிட வேண்டும். அப்பணத்தை சினிமாக் கொட்டகை உரிமையாளர் | குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | திரைப்பட கூட்டுத்தாபனத்தின் நானாவித கட்டணங்கள்) கட்டளைகளின் கீழ் மேலதிக கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அல்லது குத்தகையாளரால் நிதியத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமாயினும் அதற்குப் பொறுப்பான தரப்பினர்களால் அதன் பிரகாரம் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | | |
| (ii) | பிரிவு 5(i) | இலங்கை தேசிய திரைப்படக் கூட்டடுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை மற்றும் தலைவர் உட்பட பெயரிடப்படுகின்ற இரண்டு அங்கத்தவர்களுடன் நிதியத்தின் நிர்வாக சபை கொண்டிருக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நிர்வாக சபை நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் நிர்வாக சபையொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. | நிர்வாக சபையை முறையாக நியமனம் செய்து நிதியத்தின் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |
| (iii) | பிரிவு 2(4)(i)(ஊ) | திரைப்படங்களின் உயர் தரத்தை உறுதிப்படுத்து வதற்காக திரைப்படங்களை தயாரிப்பதற்கும் காட்சிப் படுத்துவதற்கும் தேவையான உபகரணங்களை வழங்கு வதற்காக 08 ஆண்டு காலமாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது | திரைப்படங்களின் தரத்தை உயர்த்துவதற்காக தயாரிப்பதற்கும் காட்சிப்படுத்துவதற்கும் தேவையான உபகரணங்களை வழங்க வேண்டுமென. |
| (iv) | பிரிவு 2(4)(i)(ஊ) | திரைப்பட கைத்தொழில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கும் தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் புலமை பரிசில் வழங்குதல் அல்லது பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்படுத்துவதை நோக்கி நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிர்வாக சபை நியமிப்பதற்கு தாமதமான காரணத்தினால் நிதியத்தின் நடவடிக்கைளை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | கலைஞர்களுக்கும் தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் புலமை பரிசில் வழங்குதல் அல்லது பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | பிரிவு 2(4)(i)(எ) | உயர்தரத்திலான கலை நயமுள்ள திரைப் படங்களை முழுமையாக தயாரிப்பதற்காக திரைக்கதை மதிப்பாய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்படும் அல்லது அவ்வாறான | - மேற்படி - | திரைப்பபடங்களை தயாரிப்பதற்கு தேவையான உபகரணங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கு தயாரிப்பாளருக்கு கடன் தொகை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திரைப்படங்களை தயாரிக்கும் செயற் பாட்டிற்காக பெற்றுக் கொள்ளக்கூடிய மூலங்களிலிருந்து விசேட உபகரணங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கு தயாரிப்பாளருக்கு கடன் தொகை வழங்குதல் மூலம் திரைப்படங்களை தயாரிப்பதை வருடக் கணக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வழங்கி அவ்வாறான தயாரிப்பதை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (vi) | பிரிவு 2(4)(i)(ஏ) | 05 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் தொடர்ச்சியாக உள்நாட்டு கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றும் பத்து திரைப்படங்களுக்கு குறையாத அளவில் செயற்பாடுகளை பூர்த்தி செய்துள்ள துறைசார் தொழில்நுட்ப கலைஞர்களுக்கு தமது நிபுணத்துவத்தை மேம்படுத்திக் கொள்வ தற்கும் மேம்படுத்துவதற்கு கடன் வழங்குவதற்கு 2013 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | துறைசார் தொழில்நுட்ப கலைஞர்களுக்கு தமது நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் கடன் வழங்கப்பட வேண்டும் |
| (vi) | பிரிவு 6(ஈ) | கடன்தொகை மீள் கொடுப்பனிவின் போது தாமதமானால் அதற்காக அறவிடப்பட வேண்டிய மிகை கட்டணம் சபையினால் தீர்மானிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை சினிமா திரையரங்கு களுக்கு வழங்கப் பட்டிருந்த ரூபா 72,535,872 கடன் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கடன் தொகை அறவிடுவதற்கு சிக்கல் காணப்படுவதுடன் கடன்தொகையை அறவிடுவதற்கு முடியாவிட்டால் மிகை அறவீடு செய்வதற்கு நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன்தொகை வழங்கும் போது மீள் கொடுப்பனவின் போது தாமதமானால் அறவிடப்பட வேண்டிய மிகை கட்டணம் சபையினால் தீர்மானிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2015 ஒக்தோபர் 23 ஆந் திகதிய 3'2015 திறைசேரிச் சுற்றறிக்கை | 2013 ஆம் ஆண்டில் மக்கள் வங்கியில் ஆரம்பிக்கப்பட்டிருந்த நடைமுறைக் கணக்கு 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் செயலற்று காணப்பட்டதுடன் அக் கணக்கினை மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திரைப்பட தயாரிப்பிற்காக கடன் வசதிகள் வழங்கு வதற்காகவே கணக்கு திறக்கப்பட்டது. எதிர்காலத்தில் கடன் வசதிகள் வழங்குவதற்கு எதிர் பார்க்கப்பட்டுள்ளது. அத்துடன் கணக்கும் செயற்படுத்துகின்றது. | நீண்டகாலம் இயங்காமல் இருக்கும் நடைமுறைக் கணக்கு மூடப்பட வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 09 மாதங்கள் 05 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2019 நவம்பர் 05 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிர்வாக சபையின் அங்கீகாரம் பெறுவதில் தாமதம் காணப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 11,720,551 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 8,798,358 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,922,193 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு வெளிநாட்டு தொழில்நுட்ப கலைஞர்களுக்கான பெறுவனவுகள் பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் 5 முதல் 24 ஆண்டுகளுக்கு இடையேயான கடன்பட்டோர் மீதி ரூபா 67,001,194 ஆக இருந்தது. அது அறவிடப்பட முடியாத கடனாக இனங்காணப்பட்டிருந்தது. இக்கடனை அறவிடுவதற்கு | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் காலம் பிந்தியதாலும் சினிமாக்காரர்களின் எதிர்ப்பின் பேரில் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க | கடனை அறவிடுவதற்கு முறையான வேலைத் திட்டமொன்று தயாரித்து செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முடியாமல் இருந்தது. எனினும் தற்போது கடனை அறவிடுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நிதியத்தின் பிரதான வருமான வழியாகிய திரைப்பட வாடகைப் பங்களிப்பை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிட வேண்டுமாயினும், 2003 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இப்பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வில்லை. 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பெற வேண்டிய நிலுவை தொகை ரூபா 24,470,052 ஆக இருந்தது. | கூட்டுத்தாபனத்தில் காணப்பட்ட நிதி சிக்கல்களினால் கோரப்படவில்லை. இவ்வாண்டில் வேண்டுகோள் விடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுத்தாபனத்திடம் திரைப்பட வாடகை பங்களிப்பினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2001, 2002 ஆம் ஆண்டுகளில் பில்ம் லங்கா என்ற பெயரிலான கம்பனிக்கு மருதானை சினேசிட்டி கட்டிடத் தொகுதியின் நிர்மாண வேலை நடவடிக்கைகள் மற்றும் உபகரணக் கொள்வனவு களுக்காக வழங்கப்பட்ட ரூபா 8.5 மில்லியனான கடனானது உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் அறவிடுவதற்கு தவறியிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மேலும் ரூபா 1,457,319 அறவிடப்பட வேண்டியிருந்தது. இக்கடன் தொகைக்காக 2006 ஆம் ஆண்டு வரை கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 4,064,958 என கணக்கிடப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் அதற்காக கிடைக்க வேண்டிய கடன் வட்டி அளவினை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முதலீட்டு சபையின் நிர்மாணிக்கப்பட்ட திரையரங்காக இருப்பதால் வட்டி கொடுப்பனவு கணக்கிடப்படுவதில்லை. வருடாந்தம் தவணை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | சினேசிட்டி கட்டிடத் தொகுதியின் நிர்மாணத்திற்குரிய கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2019 வரை வட்டி அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | வேகந்த வளவ்வ திரைப் படத்தின் தயாரிப்பு செயற்பாடு களுக்காக வழங்கப்பட்டிருந்த கடன்தொகை மற்றும் | அவதானிப்பு சரியானது. | திரைப்படம் இலத்திரனியல் ஊடகங்களினூடாக காண்பிக்கும் போது அதற்கான அங்கீகாரம் |

| | | |
|---|---|---|
| அதற்குரிய வட்டி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,525,795 ஆக இருந்ததுடன் அத்திரைப்படத்தின் உரிமை இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தானத்திற்கு உரித்தான போதும் அவ்வப்போது தொலைக்காட்சி மூலம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அக்காட்சி களின் வருமானம் திரைப்பட அபிவிருத்தி நிதியத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | மற்றும் காட்சி வாடகை வருமானம் அபிவிருத்தி நிதியத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 நிதியத்தின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்திற்குச் சொந்தமான வங்கிக் கணக்கில் 2018 ஆம் ஆண்டில் சராசரி மாதாந்த மீதி ரூபா 3.3 மிலியனாக ஆக இருந்ததுடன் அப்பணத்தை செயற்திறனாக குறுங் காலத்தில் முதலீடு செய்து மேலதிக வருமானமொன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்வாக சபை நியமனம் தாமதத்தின பேரில் மிகை பணம் முதலீடு செய்யப்பட வில்லை. | தொழில்படு மூலதன தேவைப்பாட்டிற்காக உரிய பணத்தை வைத்துக்கொண்டு எஞ்சியவற்றை குறுங்கால முதலீட்டில் முதலீடு செய்தல் வேண்டும். |